
(Tamil)

1096
9/91

2806 — 10 — 8

# இன்பத் திராவிடம்

~நாரா நாச்சியப்பன்~



(T)

# இன்பத் திராவிடம்

Inba Dravidam
in Tamil
Govt. of Madras
3 copies

## நாரா - நாச்சியப்பன்

NATIONAL ARCHIVES
LIBRARY
No. 25
Date 4.11.49
GOVT. OF INDIA.

**எரிமலைப் பதிப்பகம்**

துறையூர் :: திருச்சி ஜில்லா.

**பகுதி 1. இயக்கம்**

1 இன்பத் திராவிடம்
2 பெரியார்
3 எங்கள் வளநாடு
4 திராவிடம் வேண்டும்
5 கூடடா
6 தீர்ப்புக்கூறு
7 முரசு கோட்டை

**பகுதி 2. சமயம்**

1 மதவாதிகள்
2 மதத் தொல்லை
3 நாத்திகர் உலகம்
4 அடையாளம்
5 சம்மதம்
6 வாழ்வது எப்படி

**பகுதி 3, வாழ்க்கை**

1 கோயிலில் நடப்பன
2 தரகு வேண்டாம்
3 பிள்ளைப் பேறு
4 பள்ளிக்குப் பிள்ளை
5 நம்பிக்கை வேண்டும்

**பகுதி 4. தமிழ்**

1 தமிழ் மறவர்
2 கனிரசமோ
3 தமிழ் மன்னர்
4 தமிழன்னை


---


எரிமலைப் பதிப்பக வெளியீடு 19. முதல் பதிப்பு ஜனவரி 1949. விலை அணா நான்கு


உரிமைகள் ஆசிரியருக்கு


அச்சிட்டது நடராஜா அச்சகம். பிரதிகள் ஆயிரம்.



NATIONAL ARCHIVES LIBRARY
No 2886
Date 6.3.72
GOVT. OF INDIA

# இன்பத் திராவிடம்

இன்பத் திராவிடமே—தேன்
இனத்தவர் வாழும் திருநாடே!
இன்பத் திராவிடமே!

பொன்படு நாடெனப் புகுந்தயல் இனமே
போராட வாகை பூண்ட நன்னாடே!
இன்பத் திராவிடமே!

எழிலின் இருப்பிடம் எனத்தகும் வளமே
எங்கும் ஆர்ந்த இன்ப நிலமே!
வழிவழி பிறந்தநல் தமிழினம் தாங்கும்
வண்மை யுண்மை வான்வரை யோங்கும்!
இன்பத் திராவிடமே!

# பெரியார்

வெண்தாடி வேந்தரடி—தமிழர்
கொண்டாடும் சாந்தரடி!
வெண்தாடி வேந்தரடி!

பெரியார் என்றவர் புகழைப் பேசிடுவார்
புரியாமல் சிலர் அவரை ஏசிடுவார்
வெண்தாடி வேந்தரடி!

பெற்ற பிள்ளைக்குப் புத்தி சொல்வது போலே
பேசிப் பேசியவர் நாளும் உழைப்பது போலே
மற்றவர் யாரும் உழைத்துக் கண்டதும் இல்லை
மாசில்லாதவர் அவர்போல் இங்கினி இல்லை
வெண்தாடி வேந்தரடி!

எண்ணுங் கருத்தெல்லாம் சொல்லி யகன்றிடு முன்னல்
எதையும் சிந்தித்துக் கொள்க என்றுரை சொன்னல்
கண்ணுங் கருத்துமாய்த் தன் மானத்தினுக் குழைக்கும்
கைத்தடிக் கிழவரின் மெய்யன்றோ பயன் விளக்கும்!
வெண்தாடி வேந்தரடி!

# எங்கள் வளநாடு

எங்கள் வளநாடு—திராவிடம்
எனத் தினந்தொறும் பாடு
எங்கள் வளநாடு....

நெல்லும் மணியும் கொழிக்கும் நாடு
நீரும் நிலமும் வளத்த நாடு
வெல்லும் வீரர் பிறந்தநன் னாடு
வெற்றிவேல் கொற்றவர் மூவரின் நாடு
எங்கள் வளநாடு....

முப்புறக் கடலும் தெவ்வரை யடக்கும்
மூண்டெழும் வடவரை விந்தியம் தடுக்கும்
எப்புறப் பகையையும் இயற்கையே தடுக்கும்
எங்களின் தோள்வலி எவரையும் நடுக்கும்
எங்கள் வளநாடு...

திராவிடர் என்றொரு சொல்லினில் தானே
திரண்டெழும் இருதோள் மலைகளும் பார்த்தே
இராமலே பகைவர்கள் ஓடிடுவாரேல்
எம்வாள் குருதியில் தோய்வ தெவ்வாறே?
எங்கள் வளநாடு...

வாள்வலி தோள்வலி வீரமெல்லாமே
வாய்த்திடும் இலக்கியத் தேன்கவியாலே
நீள் செவி வாயெலாம் குளிருமென்றாலே
நினைக்கவும் முடியா இன்பநன் னாடே
எங்கள் வளநாடு ...

# திராவிடம் வேண்டும்

திராவிடப் பிரிவினை வேண்டும்—என்று
திராவிடர் யாவரும் கிளர்ந்தெழல் வேண்டும்
திராவிடப் பிரிவினை வேண்டும்.

ஆரியர் ஆட்சிக் கிடமிங் கேது? செயும்
ஆரியச் சூழ்ச்சிக்குத் தானிடமேது?
நாங்கள் திராவிடர் எங்களின் நாட்டை
நாங்கள் ஆண்டிட நாங்கள் வாழ்ந்திடத்
திராவிடப் பிரிவினை வேண்டும்.

ஆட்பட நாமும் அடிமைகள் தாமோ?
அடிவரை சுரண்டிடும் வடநாட்டார்கள்
தாட்பட வாழ்தல் தகுமோ? தகுமோ?
தமிழனே உணர்வுடன் எழுந்துநீ வாராய்!
திராவிடப் பிரிவினை வேண்டும்.

காலடி பணிந்து வாழ்வோம் அல்லோம்
கல்லினை வாளாத் தொழுவோம் அல்லோம்
வேலொடு வாளும் குண்டும் கொண்டு
விடுதலை வேட்கை வீறுளம் மீறத்
திராவிடப் பிரிவினை வேண்டும்.

# கூவடா

குரலினை உயர்த்திநீ கூவடா—இந்தக்
குவலயம் கிழிந்திடக் கூவடா
உரிமையாம் போரினைத் துவக்கினோம்—இனி
உல(கு) அதம் ஆமென முழக்கியே
குரலினை உயர்த்திநீ கூவடா!

குரங்கினர் ஆட்சியில் திராவிடர்—இன்று
கொடுமைப் படுதலை நினைத்தாலும்
இரங்குவர் உலகிடை மக்களே—இதை
எதிர்க்கத் துணையும் புரிவரே!
குரலினை உயர்த்திநீ கூவடா!

பாரினை ஆண்ட சீர்த்திராவிடன்—இன்று
பரம்பரை அடிமையென் றுவதோ?
தேரினை ஓட்டிய திராவிடன்—இன்று
தெருப்பிச்சை யேற்றுத் திரிவதோ?
குரலினை உயர்த்திநீ கூவடா!

வடக்கில் வாழும் தீயர்கள்—மிகு
வன்னெஞ்சக் காரர்கள் வந்திங்கு
மடக்கி ஏழையர் பொருளெலாம்—வாரி
மகிழக் கண்டுளம் எரியுதே!
குரலினை உயர்த்திநீ கூவடா!

தீமைகள் அகலத் திராவிடர்—ஒன்றாய்த்
திரண்டு விட்டனர் செயலிலே
ஆமைகள் ஊமைகள் அல்லர்காண்
அடலேறு வழியினன் நானெனக்
குரலினை உயர்த்திநீ கூவடா!

# தீர்ப்புக்கூறு

தீர்ப்புக் கூறிடு தோழா நீ
திராவிடர் ஆரியர் வேறின மென்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

தனித்துண்ணும் கெட்ட வழக்கங்கள் எங்கள்
தமிழினத் தெவர்க்கும் இல்லையென் றின்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

மூக்கைத் தொட்டுப் பகைவர்கள் வீழ
முனகிடும் சாத்திரம் திராவிடர்க் கில்லை
நாக்கில் வடமொழி தாண்டவ மாடிட
நச்சிடும் நச்சர்கள் வேறின மென்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

நெற்றி வியர்வை நிலத்தினில் வீழ
நித்தமும் உழைப்பவர் பொருளெலாம் நாளும்
எற்றிப் பிழைக்கும் வழக்கங்கள் உள்ளோன்
எங்கள்நல் லினத்தினும் வேறவனென்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

நல்ல அறிவைக் கெடுத்திந்த நாட்டில்
நால்வரு ணங்களே நாட்டிநிற் பவரை
அல்ல நம்மினம் அல்லவே யென்றும்
ஆரியர் திராவிடர் வேறின மென்றும்
தீர்ப்புக் கூறிடு தோழா?




கொட்டு கொட்டு கொட்டென்று
கொட்டுமுரசே—பகை சாகக்
கொட்டு முரசே!

கத்தி யேற்றுக் கழல் அணிந்து
களத்தை நோக்கும் வீரர்கள்
சித்தம் கல்லாய்ச் செய்தல் வேண்டும்
செய்தல் வேண்டும் என்று நீ
கொட்டு முரசே!

பிறப்பில் வேறு பாடில் லென்ற
விளக்கங் கண்ட வீரர்க்கே
இறப்பில் இல்லை வேறு பாடு
இறப்பில் இல்லை என்று நீ
கொட்டு முரசே!

தாய்க்கென் மாற்றான் செய்த தொல்லை
தானும் கனலாய் நெஞ்சிலே
வாய்த்துப் பகையைச் சுட்டுப் போடும்
சுட்டுப்போடும் என்று நீ
கொட்டு முரசே!

ஆட்டம் போடும் பகையை நாங்கள்
அழித் தொறுத்தல் நெஞ்சிலே
நாட்ட மாகக் கொண்டு விட்டோம்
கொண்டு விட்டோம் என்று நீ
கொட்டு முரசே!

# மதவாதிகள்


கருத்தை மாய்த்திடு வாரே
கற்பகத் தருவினுலே காம தேனுவாலே
கருத்தை மாய்த்திடுவாரே!

நினைத்தபடி தின்று மகிழ்ந்திடலாம்
நித்தமும் இறைவனைப் பணிந்தால் என்று
கருத்தை மாய்த்திடுவாரே!

தேங்காய் பழம் கொண்டுவாடா என்பார்
தேவைப்பணம் முடிந்து கொடடா என்பார்
ஆங்காலம் வரும் வரை பொறுத்திடச்சொல்வார்
அப்பால் ஓர் உலகம் மிகவினி தென்பார்
கருத்தை மாய்த்திடுவாரே!

நான்தான் கடவுளின் தூதுவன் என்பார்
நம்புக என் வாய்ச் சொல்லெலாம் என்பார்
தேன்போல் இன்பமே வெறுத்திடச் சொல்வார்
தெரியாப் புரியொன்றைத் தேடுக என்பார்
கருத்தை மாய்த்திடுவாரே!

வேதமென் றொன்றைப் புகன்றிடு வார்கள்
விளக்கினர் அதனைக் கடவுளென் பார்கள்
காதலை வெறுத்ததில் ஓதியிருக்கும்
கடவுளுக் குலகம் தழைப்பதில் வெறுப்போ?
கருத்தை மாய்த்திடுவாரே!




மதத்தினால் வரும் தொல்லை—அதை
மாய்த்துவிடாவிடில் இன்பமே இல்லை
மதத்தினால் வரும் தொல்லை.

ஏசுவைக் காந்தியைக் கொன்றது போலே
எவரையும் கொன்றிடப் பின்வாங்காத
மதத்தினால் வரும் தொல்லை.

மதவெறி உயிரை மாய்த்திடும் என்றே
மாநிலத் தறிஞர் கூறிய வெல்லாம்
நிதநிதம் மெய்யெனக் கண்டுகொண்டிருந்தும்
நீவிர் ஏன் மதத்தினை விரும்புதல் வேண்டும்?
மதத்தினால் வரும் தொல்லை.

ஏசுவும் காந்தியும் மதத்தினைத் தாங்கி
இன்ப புரியென நம்பி ஏமாந்தார்.
பாசங்கள் வெறுத்திடச் சொல்லிடும் மதமே
பாதகம் செய்திடக் கூசிடுமோ சொல்!
மதத்தினால் வரும் தொல்லை.

வாழ்ந்திட மதமெனத் தொண்டுகள் செய்து
வடித்தனர் குருதியைச் சிலுவையில் ஏசு.
ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் காந்தி
அந்தோ சுட்டது மதவெறி யவரை!
மதத்தினால் வரும் தொல்லை.

# நாத்திகர் உலகம்

நாத்திகர் உலகத்திலே—எந்த
நாய்க்கும் அடிமைகள் அல்லவே மக்கள்
சாத்திரங்கள் ஒன்றும் இல்லை—அங்குச்
சண்டாளர் நீசர் என்ற சொற்களில்லை.
பேய்த்திறச் சண்டைகளே—அங்குப்
பேச்சிலும் இல்லை ஓர் கூச்சலும் இல்லை.
ஏய்த்திடும் மதத்தலைவர்—இல்லை
எனவே வாழ்விலோர் துன்பமும் இல்லை.
நாத்திகர் உலகத்திலே!

கட்டுக் கதைகள் இல்லை—கல்லைக்
கண்டு வணங்கிடும் மக்களும் இல்லை.
வெட்டுக் குத்துக்கள் இல்லை—மக்கள்
வீணாய்ச் சண்டைகள் போடுவதில்லை
மட்டக் கருத்துக்கள் இல்லை—அவை
வளர்க்கும் அமைச்சர்கள் யாருமங்கில்லை.
வெட்டுக் கரையான்கள் இல்லை—சொந்த
வீரத்தைப் புகழ்ந்திடத் தாள்களும் இல்லை.
நாத்திகர் உலகத்திலே!

தாய்மொழி போற்றிடுவார்—வீரத்-
தாலே நாட்டினைக் காத்தல் புரிவார்
ஆய்ந்தொன்றை யொப்பிடுவார்—மக்கள்
யாரும் சிந்தனைக் குயர் வளிப்பார்
வாய்ந்துள்ள கலைகளிலே—மக்கள்
வாழ்வை யுயர்த்திட வல்லன தம்மை
ஆய்ந்துதான் போற்றிடுவார்—அவை
அழியாமற் காத்தல் கடமை என்பார்.
நாத்திகர் உலகத்திலே!

# அடையாளம்★

தாடி ஒரு அடையாளம் — மனிதச்
சாமிகளுக்குச் சாய உடையுடன்
தாடி ஒரு அடையாளம்!

கோயிலில் குளத்தில் வீதியில் வழியில்
கூட்டத்தின் நடுவில் சாமியார்களுக்குத்
தாடி ஒரு அடையாளம்!

பூசிய நீறு நெற்றியில் இருக்கும்
பொட்டும் சிவப்பாய் இட்டுவைத் திருக்கும்
மீசையும் அழகாய் வளைத்துவைத் திருக்கும்
மேலடை யாளம் இவைகளோ டந்தத்
தாடி ஒரு அடையாளம்!

மொட்டையாய்ச் சில சாமி இருக்கும்
முன்புத்தி யவற்றிற்குக் கொஞ்சமும் இல்லை
கொட்டை மணிகளைக் கோத் தெடுத்துக்
குள்ளச் சாமிகள் கட்டி யிருக்கும்
தாடி ஒரு அடையாளம்!

விடுவீர் உலக ஆசை யென்னும்
வெள்ளை வேட்டிச் சாமி தானே
குடுமி பூணூல் சாமி களோ
கொஞ்சமும் நம்பத் தக்கன வல்ல!
தாடி ஒரு அடையாளம்!

# சம்மதம்

ஏமாற்றப் பார்ப்பார் சிலர் — உள்ள
எம்மதமும் சம்மதமே என்று சொல்லி
ஏமாற்றப் பார்ப்பார் சிலர்.

கல்லைக் கடவுளென்னும் மதத்தையும் சேர்த்துக்
கட்டிக் கடாவெட்டும் மதத்தையும் சேர்த்து
ஏமாற்றப் பார்ப்பார் சிலர்.

எல்லா மதங்களும் நமக்கின்றே
எதிரிகள் ஆகிற் றன்றோ?
நில்லாது விரையும் முன்னேற்றம்
நிற்கவோர் முட்டுக் கட்டை
பொல்லா மதங்கள் அல்லவோசொல்?
புரிவார் சூழ்ச்சி நம்மை
ஏமாற்றப் பார்ப்பார் சிலர்.

எல்லா மக்களும் சமமென்னும்
எண்ணம் பிறந்தா லன்றோ
நல்லார் என்றிவர் தம்மை யொப்பி
நாமும் தொடர்வோ மன்றோ
சொல்லால் மதங்கள் சமமென்று
சூழ்ச்சிப் பலத்தால் நம்மை
ஏமாற்றப் பார்ப்பார் சிலர்.

# வாழ்வது எப்படி?


எப்படி வாழ்வது தோழா — நீ
இந்தப் பொய் மதத்தினை நம்பியிருந்தால்
எப்படி வாழ்வது தோழா ?

தேவைக் குரிய பொருள்கள் எல்லாம்
தேடிக் கொணர்ந்து கல்
பாவைக் கெதிரில் படைத்து வீணாய்ப்
பாடிக் கொண்டிருந்தால்
எப்படி........

பச்சைப் பசுங் குழந்தை கதறிப்
பாலுக் கழுதுயிரை விட
சிச்சீ இறைவனென்று பாலைச்
சென்று கல்லுக் கூற்றி வந்தால்
எப்படி.......

கஞ்சிக் கிலாதிங்கே மக்கள்
கதறித் துடித்துயிரை விட
நெஞ்சில் ஈரமில்லாமல் சோற்றை
நிதமும் கல்லுக்குப் படைத்தால்
எப்படி......

கட்டத் துணியில்லாமல் மானம்
காற்றில் பறக்கும் போதில்
பட்டுத் துணிகள் கட்டிக் கல்லைப்
பல்லக் கேற்றிக் கொண்டுவந்தால்
எப்படி.......



# கோயிலில் நடப்பவை

கோயிலுக்குப் போய்வருகின்றாய் கண்ணே-அந்தக்
கோயிலிலே கண்டதென்ன நன்மையுண்டா
கோயிலுக்குப்....... [சொல்வாய்

வாயிருக்கும் போதினிக்கும் செந்தமிழை விட்டு
வடமொழியில் மந்திரங்கள் சொல்லுகின்றான்
கோயிலுக்குப்....... [பார்ப்பான்

செந்தமிழைக் கரைகண்ட பண்டிதர்கள் எல்லாம்
செல்லுகின்றார் கோயிலுக்குத் தினந்தினமும் [என்றால்
புந்தியிலே உணர்வில்லை வடசொல்லை நீக்கப்
போதியநெஞ் சுரமில்லை வளரவிட்டு விட்டார்
கோயிலுக்குப்......

இலட்சலட்சம் பணமழித்துக் கட்டிவைத்த செல்வர்
ஏனென்று கேட்பதற்கோ பகுத்தறிவே இல்லை.
அலட்சியமாய்ச் செல்லுகின்றார் ஊர்திகளில் ஏறி
யாருக்கும் தமிழ்பற்றி அக்கறையே இல்லை.
கோயிலுக்குப்......

செந்தமிழைக் கெடுப்பதெனும் உறுதிகொண்ட பார்ப்பான்
செல்லுகின்றான் கல்லுருவம் இருக்கும்வரை சென்று
வந்திருக்கும் பக்தர்களின் மடத்தனத்தைக் கண்டு
வாங்குகின்றான் பணம்பழம்பால் தேன்அரிசி எல்லாம்.
கோயிலுக்குப்........

# தரகு வேண்டாம்

திருமணம் செய்து கொள்ளும் தோழா - [பெண்ணின்
விருப்பத்தை யறிந்து கொண்டாயா ?
திருமணம்.... ...

ஒருமன தாகித் திருமணம் செய்தால்
இருவருக் கிடையில் தரகர்கள் வேண்டாம்
திருமணம்......

புரோகிதன் என்றொரு பார்ப்பான் வந்து
புரியாத சொற்களில் ஏதோ சொல்லிப்
புராதன ஆரியர் பழக்கமென் றோதிப்
பொருள்கள் பெற்றிட விடுவது தகுமா ?
திருமணம்.......

சாதகம் ஆரூடம் எனப்பல சொல்லிச்
சாதிப்பர் பொருத்தங்கள் ஏழுமுண் டென்று
வாதமேன் உள்ளங்கள் இரண்டுதான் ஒன்றாய்
வந்திணைந் தாலின்பம் சேர்ந்திடு மன்றோ ?
திருமணம்.......

பெண்ணைக் காணப் பெற்றோர் போய்வரப்
பேசாமல் இருந்தால் வாழ்கின்ற போதில்
கண்போலே நீயும் ஒளியேபோல் அவளும்
கலந்தின்பங் கூட வழிதானும் உண்டோ ?
திருமணம்......

# பிள்ளைப்பேறு

பிள்ளைப் பேறு நல்லபேறு—அது
பெறுதற் கெல்லார்க்கும் இயன்ற பேறு
பிள்ளைப் பேறு நல்ல பேறு.

இயற்கையே உலகம் தழைக்கவே என
ஏற்படுத்திய இன்பச் சேர்க்கையிலே வரும்
பிள்ளைப் பேறு நல்ல பேறு.

சின்னக் கைநீட்டி மழலை பாடிச்
சிந்தைக்கு நல்ல விருந்த ளிக்கும்
மின்னற் கண்காட்டிச் சிரிப்புக் காட்டி
மேலான இன்ப மயக்க ளிக்கும்
பிள்ளைப் பேறு நல்ல பேறு.

கண்ணுக்கே இன்பக் காட்சி என்னக்
காலிரண்டும் பின்னும் குறு நடையும்
மண்ணுக்கே வந்த மதியைப் போலே
மாசற்ற முகத்தால் ஆசை வளர்க்கும்
பிள்ளைப் பேறு நல்ல பேறு.

ஏழெட் டென்றிங்குப் பிறந்து நம்மை
இடர்ப் படுத்தித் துன்பம் ஏற்படுத்தி
வாழற் கியலாத வகை செய்யாது
வளர்க்க ஒன்றிரண்டு பிள்ளை யென்றால்
பிள்ளைப் பேறு நல்ல பேறு.

# பள்ளிக்குப் பிள்ளை

பள்ளிக்குப் பிள்ளை போய்வர வேண்டும்-அதைப்
பார்த்துப் பெற்றவர் மகிழ்ந்திட வேண்டும்
பள்ளிக்குப் பிள்ளை.......

சின்னப் பருவத்தில் எதையும் அறியச்
சிந்தை துடிக்கும்இக் காலத்தி லேயே
பள்ளிக்குப் பிள்ளை......

சொல்லும் பாடத்தைச் சுவையுடன் கற்கவும்
சோர்வில்லாமல் விளையாடல் கற்கவும்
நல்ல பருவந்தான் பிள்ளைப் பருவமாம்
நற்பெற் றோருக்குச் சொல்லுவேன் இன்றே
பள்ளிக்குப் பிள்ளை.......

ஒன்றாய்க் கூடியே பிள்ளைகள் ஆடவும்
ஓய்வில் லாமலே சுறுசுறுப் பாகவும்
கன்றாய்த் திரிகின்ற பிள்ளையைக் காணவும்
களிபே ருவகையிற் பெற்றோர் கூத்தாடவும்
பள்ளிக்குப் பிள்ளை.......

பையன் கல்லூரி போய்வர விரும்பினால்
பார்க்காமற் செலவை யனுப்பிவைப் பீரே
மெய்யாய்ப் படிப்பில் விருப்பிலை என்றால்
மேற்படிப்பு வேண்டாம் எனினும் உயர்நிலைப்
பள்ளிக்குப் பிள்ளை.......

# நம்பிக்கை வேண்டும்

நம்பிக்கை யாலே உலகம்—இன்று
நடப்பதை மறுப்பவர் இல்லைகண் டீரே!
நம்பிக்கை யாலே.......

யாரையும் எதனையும் நம்பா விட்டால்
அமைதி யொழிந்திடும் அன்பு குறைந்திடும்!
நம்பிக்கை யாலே.......

சொல்வன யாவையும் அப்படி யப்படிச்
சொல்லிய சொற்படி நம்பிட வேண்டாம்
வெல்வது வாழ்க்கையில் வேண்டு மென்றாலே
விளைவினை ஆய்ந்துபின் நம்பிடுவீரே!
நம்பிக்கை யாலே......

மதவெறி யூட்டிடக் கருதுவோர் பற்பல
மாகதை கூறிடும் அறிவினை மாய்ப்பார்
அதையெலாம் நம்பிட வேண்டவே வேண்டாம்
அதிற்பல போர்களும் தோன்றிடு மன்றோ?
நம்பிக்கை யாலே......

ஒருவரை ஒருவரே நம்பிடு வாரேல்
ஒழிந்திடும் சண்டைகள் கவலைகள் எல்லாம்
பெருநிலத் தறிஞர்கள் கூறிடும் சொல்லில்
பேதமிலாக் கருத் திதென அறிவீர்!
நம்பிக்கை யாலே.......

# தமிழ் மறவர்

மறவர் என்றசொல் தமிழரைக் குறிக்கும்—இந்த
மாநிலம் தமிழர்கள் சொற்படி குதிக்கும்
மறவர் என்ற சொல்....

பெண்ணுக்கும் ஆணுக்கும் வேற்றுமை இன்றிப்
பிறைபோற் கத்தி, வில் வழங்குமிந் நாட்டில்
மறவர் என்ற சொல்...

எங்கள் வண்டமிழ் இகழ்ந்தவன் யாரே
என்றெழுந் தோடும் செங்குட்டுவன் மாரே
மங்கை கண்ணகி வீறுளம் மகிழ
மார்தட்டிப் போருக்குப் புறப்படும் நாட்டில்
மறவர் என்ற சொல்...

பரணிகள் ஆயிரம் பாடிஎம் வீரம்
பாருக்குக் காட்டிடும் பாவலர்க் காரம்
தருவது தானெங்கள் வெற்றியின் விளைவாம்
தாரணி தானெங்கள் போர்க்களம் ஆமாம்!
மறவர் என்ற சொல்...

தேர்விடு வானொரு சேயவன் தோளும்
தெவ்வரை யடக்கிடும் அம்புவில் வாளும்
பேருக்கும் பிரிவினை யடைந்தது மில்லை
பேச்சென நினைப்பவர் நேர்வந்து பாரீர்!
மறவர் என்ற சொல்....

# கனிரசமோ

கனிரசமோ? பாகோ? அடிக்
கரும்பின் சாருே? தேனே?
கனிரசமோ? பாகோ?
நனியுவப்பை உள்ளத்தில் நாட்டும் செந்தமிழ்
நாம் விரும்பிக் குடிக்கும் அமுதோ?
கனிரசமோ? பாகோ?

காவியம் என்னுமோர் பானையில் வைத்துக்
கவிதையாய்ப் பொழிந்த தெள்ளமுதோ?
ஆவியைக் கவர்ந்திடும் உவமை யணியின்
அழகெலாம் அடைந்ததும் எவ்வாருே?
கனிரசமோ? பாகோ?

எத்தனை மெல்லியள் செந்தமிழ் மங்கை?
இன்பத்தின் ஊற்றெனை நின்றவளே
சித்தத்தில் தேக்கிடும் புத்தமு தெல்லாம்
சேர்த் தெடுத் தோதுவதெவ் வாருே?
கனிரசமோ? பாகோ?

நாடகத் தமிழென ஆடினள் ஆடி
நல்லிசைப் பாட்டெனப் பாடினள் இயலில்
ஓடினள் கடல்கடந் துலவினள் எங்கும்
உற்றிடும் வெற்றியில் முழக்கினள் வீரம்
கனிரசமோ? பாகோ?

# தமிழ் மன்னர்

வில்லும் புலியும் மீனுங் கொண்டு—வென்று
விளங்கினர் தமிழ் மன்னர் பண்டு
வில்லும்.......

அல்லும் பகலும் தமிழ் ஆர்வத்தினாலே
அவர்செய்த போர்கள் பல்லாயிரம் ஆமே!
வில்லும்........

பாண்டியன் ஆரியப் படை கடந்தான்
பல்கடலும் தாண்டி வளம் கொணர்ந்தான்
ஆண்டநற் செல்வங்கள் கடற்படையாலே
அதை விளக்கத் தக்ககுறி மீன்கொடிதானே!
வில்லும்......

சோழனோ தோள்வலி மிக்குடையானும்
சோறுண்ணும் ஆரியர் இமயம் வென்றானும்
வாள்வீசிப் புலி பாய்வதைப் போலே
வருவதைக் காட்டுதல் புலிக்கொடி தானே!
வில்லும்......

சேரன் தமிழ் மண்ணைப் பழித்த ஆரியரைச்
சென்றடக்கி வென்றவன் தானன்றோ முன்னே
வீரத்தில் விண்முட்டும் புகழ் கொண்டானிதை
விளக்கிக் காட்டுதல் விற்கொடி தானே!
வில்லும்......

# தமிழன்னை

அன்னையடா தமிழ் அன்னை—உலகில்
யாருக்கும் பணியாத வீரத்தைச் சேர்த்தவள்
அன்னையடா தமிழ் அன்னை.

பண்டு திருக்குறளைப் படைத்து வைத்திந்தப்
பாருக் குன்னைத் தெரியப் படுத்தி வைத்தவள்
அன்னையடா தமிழ் அன்னை.

அகம்புறம் என்றிரு நூல்வழி வகுத்தாள்
ஐந்நில இலக்கணம் தானவள் வகுத்தாள்
புகும்வெளி நாட்டினர்க் கெல்லாம் அறிவைப்
புகட்டி நாகரிகம் பரப்பினாள் உன்றன்
அன்னையடா தமிழ் அன்னை.

தோள்தின வெடுத்திடின் போர்க்களம் [காட்டித்
தொண்டுக்கு மகிழ்ந்திசைப் பரணியும் பாடி
ஆள்பவன் நீயென அரியணை காட்டி
அன்னியர்க்குன் வீரம் விளக்கமாய்க் காட்டும்
அன்னையடா தமிழ் அன்னை.

சூழ்ச்சியால் உன்னை வென்றனர் ஆரியர்
சூழ்ந்தன பேதங்கள் வீழ்ந்ததுன் வீரமும்
ஆழ்ந் தெண்ணிப் பார்க்கும் அறிவை [இழந்தாய் நீ
அகமிக நொந்தவள் அலறியே நைந்தவள்
அன்னையடா தமிழ் அன்னை.

## முத்தம் ... ... ...

இதழ்களின் இன்ப இணைப்பு!
உதடுகளின் உரிமைப் போர்!

## காமம் ... ... ...

காட்டாறு அல்ல, அணை போட!
அது ஓர் பயங்கர எரிமலை!

எரிமலையில் சிக்கிய எதுதான்
தப்பமுடியும்? கணக்கற்ற நாடுகள்
காமத்தால் கண்ணை மூடின?

இதைச் சித்தரிக்கும்

அற்புத கற்பனை ஓவியம்

# அன்பழகன் ஆட்சி

(999 தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணியின் தொடர்ச்சி)

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதியது

விரைவில் வெளிவரும்

## எரிமலைப் பதிப்பக வெளியீடாக

Cover Page Printed at Ravi Printers, Broadway, Madras